2020 மார்ச் 20]

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. இரா. காமராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர்—முன்னாள் அமைச்சர் அவர்கள் கேட்ட கேள்வி பரிசீலனையில் உள்ளது. பரிசீலனையின் அடிப்படையில் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை இந்த நேரத்தில் மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 142, மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி, மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

142—

கால்நடை மருத்துவமனை

***54341—திரு. ஆ. கிருஷ்ணசாமி:**

மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) பூந்தமல்லி தொகுதி, கொமக்கம்பேடு ஊராட்சியில் கால்நடை மருத்துவமனை அமைக்க அரசு முன்வருமா?

(ஆ) ஆம் எனில், எப்போது?

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன், கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) பூந்தமல்லி தொகுதி, கொமக்கம்பேடு ஊராட்சியில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் நேரடியாக கால்நடை மருத்துவமனைத் துவக்க கோரியுள்ளார்கள். அரசு விதிமுறைகளின்படி முதலில் கால்நடைக் கிளை நிலையம் தோற்றுவிக்கப்பட்டு, பின்பு கால்நடை மருந்தகமாகவும், அதற்குப் பின்னர் கால்நடை மருத்துவமனையாகவும் தரம் உயர்த்தப்படும். கால்நடைக் கிளை நிலையம் அமைக்க குறைந்தது 3000 கால்நடை அலகுகள் இருத்தல் வேண்டும். கொமக்கம்பேடு ஊராட்சியில் கால்நடை அலகுகளின்

எண்ணிக்கை 325 ஆக உள்ளது. அருகிலுள்ள பூச்சாணிமேடு மற்றும் தாமரைப்பாக்கம் ஆகிய கிராமங்களையும் சேர்த்து 875 கால்நடை அலகுகள் மட்டுமே உள்ளன. ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிய கொமக்கம்பேடு ஊராட்சியில் கால்நடைக் கிளை நிலையம் அமைக்க சாத்தியக்கூறுகள் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓயாமல் உழைத்து, உறங்கிக்கொண்டிருக்கிற எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள் துயில்கொள்ளும் திசை நோக்கி வணங்குகிறேன். சுயமரியாதைக் காத்த இனமான காவலர், பேராசிரியர் ஐயா அவர்களையும் வணங்குகிறேன். இந்த அவையில் பேசுகிற வாய்ப்பை எங்களுக்கு வழங்கி, எங்களை வழி நடத்திக்கொண்டிருக்கிற கழகத்தினுடைய தலைவர், எதிர்கால நம்பிக்கை நட்சத்திரம் எங்கள் அண்ணன் தளபதியார் அவர்களை வணங்குகிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தலைவர் கலைஞர் அவர்களுடைய ஆட்சியில் கால்நடை பாதுகாப்புத் திட்டம் என்ற ஒரு திட்டத்தைக் கொண்டு வந்து, அந்தத் திட்டத்தின் மூலமாக கிராமம், கிராமமாகச் சென்று, கால்நடைகளுக்கு வைத்தியம் பார்த்து, கால்நடைகளையெல்லாம் பாதுகாத்தவர் எங்கள் தலைவர் கலைஞர் அவர்கள். கலைஞர் ஆட்சியில் நடைமுறைப்படுத்தப்பட்ட கால்நடை பாதுகாப்புத் திட்டம் இன்றைக்கு படிப்படியாக நிறுத்தப்பட்டிருக்கிறது. எனவே, அந்தத் திட்டத்தை மீண்டும் செயல்படுத்தக் கேட்டுக்கொள்கிறேன். 5, 10 கிலோ மீட்டர் தூரம் கால் கடுக்க கால்நடைகளை மருந்தகத்திற்கு அழைத்து வந்து ஒரு நாள் முழுவதும் தங்களுடைய வாழ்வாதாரத்தை வீணடிக்கக்கூடிய நிலை மாற வேண்டும். கிராமத்திலேயே மருத்துவர்கள் வந்தால் அது மிக எளிதாக இருக்கும் என்பதை இந்த நேரத்தில் வலியுறுத்தித் தெரிவித்துக்கொள்கிறேன். கொமக்கம்பேட்டில் மருத்துவமனையை அமைத்துத்தர முடியவில்லை என்று சொன்னாலும், யாதவ மக்கள் பெரும்பாலும் வாழ்கிற ஆயில்சேரி பகுதியில் அதிகமாக மாடுகள் இருக்கிற காரணத்தினால், அங்கே ஒரு கிளை நிலையம் கொண்டு வந்தால் மிகச் சிறப்பாக இருக்கும். அதேபோல, பாக்கம் கிராமத்தில் இருக்கிற மருந்தகத்தை

2020 மார்ச் 20]

மருத்துவமனையாக தரமுயர்த்தவும் கேட்டுக்கொள்கிறேன். மாகரல் கிராமத்தில் ஏற்கெனவே உள்ள மருந்தகத்தில் மருந்து வைப்பதற்கு fridge கூட இல்லை; பாதுகாக்கப்பட்ட மருந்துகள் இல்லை என்று அங்கே இருக்கக்கூடிய மருத்துவர்கள் கவலைப்படுகிறார்கள். அந்த நிலை மாற, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் முன்வருவார்களா என்று தங்கள் மூலமாகக் கேட்டு அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பாக்கம் பகுதி கால்நடை மருந்தகத்தைத் தரம் உயர்த்த வேண்டும் என்று கேட்டுக்கொண்டார்கள். கால்நடை பராமரிப்புத் துறையினுடைய இயக்குநர் அவர்களை அனுப்பி ஆய்வு செய்து, தேவைப்படுமாயின் நிதிநிலைக்கேற்ப அங்கே கால்நடை மருத்துவமனையாகத் தரமுயத்துவதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கின்றேன். அதேபோல, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசுகின்றபோது, கால்நடைகளுக்கு மருத்துவம் பார்ப்பதற்காக கால் கடுக்க நிற்கின்றார்கள் என்ற ஒரு கருத்தைச் சொன்னார்கள். மேலும், அவர்களுடைய ஆட்சிக் காலத்தில் நேரடியாகச் சென்று வைத்தியம் பார்த்ததாகவும் சொன்னார்கள். இன்றைக்கு மாண்புமிகு அம்மாவினுடைய அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தமிழகத்திலே நேரடியாக கால்நடைகளைத் தேடிச் சென்று அவற்றிற்கு சிகிச்சை அளிக்க வேண்டும் என்பதற்காகத்தான் Animal Mobile Medical Ambulance (AMMA) அம்மா திட்டத்தை இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாத வகையில் உருவாக்கியிருக்கிறார்கள் என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கின்றேன். (மேசையைத் தட்டும் ஒலி) ஆகவே இன்றைக்கு 1962 என்கின்ற எண்ணை அழைத்தால், கால்நடைகள் எதுவாக இருந்தாலும் சரி, அவற்றிற்கு உயரிய சிகிச்சை அளிக்க வேண்டும் என்று நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் குறிப்பிட்டது போன்ற நிலையில்லை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கால்நடைக் காப்பாளராக இருந்து, கால்நடைகளுக்குத் தேவையான அனைத்தையும் இன்றைக்குச் செய்துகொண்டிருக்கின்றார்கள் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

[2020 மார்ச் 20

முற்பகல் 10–55

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆ. கிருஷ்ணசாமி அவர்கள்.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சட்டமன்றப் பேரவையில் பேசுகிறபோதும் சரி, சட்டமன்றத்திற்கு வெளியே பேசுகிறபோதும் சரி, கால்நடை மருந்தகங்களில் எல்லாவிதமான மருந்துகளும் இருக்கின்றன என்று சொல்லியிருக்கிறார்கள். ஆனால், தமிழ்நாட்டில், திருவள்ளூர் மாவட்டத்தில், இன்றைக்கு Lumpy skin disease என்றழைக்கப்படும் கொப்பளமாக வரும் ஒரு நோய் மாடுகளை மிகத் தீவிரமாகத் தாக்கி வருகிறது. இன்றைக்கு எப்படி Corona virus மனிதனை பாதிக்கிறதோ, அச்சுறுத்துகிறதோ, அதேபோல், Lumpy skin disease மாடுகளை அச்சுறுத்திக்கொண்டிருக்கிறது. மருந்தகத்திற்குச் சென்றால், Lumpy skin disease-க்கு மருந்து இல்லையென்பதற்காக, கோமாரி நோய்க்குப் போடப்படுகிற ஊசியே மாடுகளுக்குப் போடப்படுகிறது. இதனால் மாடுகள் பயன்பெறவில்லை. எனவே, Lumpy skin disease-ஐத் தீர்ப்பதற்கான மருந்து மருந்தகத்தில் இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன். அதேபோல் நீங்கள் ஆட்சிக்கு வந்தபோது, ஆட்சிக்கு வந்தால் அனைவருக்கும் ஆடு, மாடுகள் தரப்படும் என்று சொல்லிவிட்டு, ** கேட்டால், அதில் அதிகமாக விதிமுறைகள் பின்பற்றப்படுவதாகச் சொல்கிறீர்கள். (குறுக்கீடுகள்) கடுமையான விதிகள் இருப்பதால் வழங்க முடியவில்லை என்று அதிகாரிகள் கவலைப்படுகிறார்கள். எனவே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அந்த விதிகளைத் தளர்த்தி, அனைவருக்கும் ஆடு, மாடுகள் வழங்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் குற்றச்சாட்டு இல்லாமல் பேசுங்கள். அது அவைக் குறிப்பிலிருந்து நீக்கப்படுகிறது.

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, குற்றச்சாட்டு ஏதும் சொல்லவில்லை.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இல்லை, இது கேள்வி நேரம், குற்றச்சாட்டு வேண்டாம்.

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

2020 மார்ச் 20]

திரு. ஆ. கிருஷ்ணசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆடு, மாடுகள் வழங்குவதற்கு விதிக்கப்படுகிற கடுமையான விதிகளைத் தளர்த்தி, அனைவருக்கும் ஆட்டுக்குட்டியும், கன்றுக்குட்டியும் வழங்குவீர்களா என்று கேட்டு அமர்கிறேன், நன்றி, வணக்கம்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் பேசும்போது, திருவள்ளூர் மாவட்டத்தில் குறிப்பிட்ட நோயின் பெயரைச்சொல்லி,அந்தநோய்இருப்பதாகவும்,அதற்குத்தேவையான மருந்து இல்லையென்றும் சொன்னார்கள். உடனடியாக அது குறித்து துறை அதிகாரிகளிடம் கேட்டு அதற்கான பதிலைச் சொல்கிறேன் என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். மேலும், கால்நடை பராமரிப்புத் துறையில், ** வெள்ளாடுகள் கொடுக்கப்படுகின்றன என்று ஒரு தகவலைச் சொன்னார்கள். அது முற்றிலும் தவறு என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன். ஏனென்றால், இன்றைக்கு மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் அரசில்தான், கடந்த 9 ஆண்டுகளில், இந்தியாவில் எந்த மாநிலத்திலும் இல்லாதவகையில், (மேசையைத் தட்டும் ஒலி) ஏறத்தாழ 11,67,674 மகளிருக்குத் தலா 4 ஆடுகள் வீதம் 46,70,696 வெள்ளாடுகள் மற்றும் 46,70,696 செம்மறியாடுகள் கொடுக்கப்பட்டுள்ளன. 1,656 கோடி ரூபாய் செலவில் ஆடு, மாடுகளைக் கொடுத்த அரசு, நமது அம்மா அவர்களின் அரசு என்பதை முதலில் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் பொறுப்பேற்பதற்கு முன்னர், ஒவ்வொரு ஊராட்சியிலும் 400 பயனாளிகள் இருந்தால், அவர்களில் 250 பயனாளிகளுக்குக் கொடுத்துவிட்டு, எஞ்சிய 150 பயனாளிகளுக்கு அடுத்து வருகின்ற ஆண்டுகளில் வழங்கிக்கொண்டிருந்தோம். ஆனால், இந்த 3 வருடக்காலமாக மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்கள் ஓர் ஊராட்சியில் 450 பயனாளிகள் இருந்தால், 450 பயனாளிகளுக்கும் கொடுக்க வேண்டுமென்று சொல்லி, அதை

** மாண்புமிகு பேரவைத் தலைவரின் ஆணைக்கிணங்க அகற்றப்பெற்றது.

இப்போது செயல்படுத்திக் கொண்டிருக்கிற அரசு, மாண்புமிகு அம்மா அவர்களின் அரசு, மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களுடைய அரசு என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். இந்தியாவில் இதுகாறும் இல்லாதவகையில், இந்தியாவில் இருக்கின்ற அனைத்து மாநிலங்களுக்கும் முன்னோடியாக தமிழகத்தின் கால்நடை பராமரிப்புத் துறைதான் முதன்மை இடத்தைப் பெற்றிருக்கின்றது. அதற்கு வித்திட்டது நமது மாண்புமிகு முதலமைச்சர் அண்ணன் எடப்பாடியார் அவர்களின் தலைமையிலான மாண்புமிகு அம்மா அவர்களுடைய அரசு என்பதையும் இந்த நேரத்தில் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.என். நேரு அவர்கள்.

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நமது மாண்புமிகு அமைச்சர் அவர்கள் நிதிநிலை அறிக்கையில், சேலம் மாவட்டத்தில்சிறப்பானதொருகால்நடைப்பண்ணையும்,கால்நடைக் கல்லூரியும், கால்நடை ஆராய்ச்சிக்கூடமும் அமைக்கப்படும் என்று சொன்னார்கள். எனக்குத் தெரிந்ததைச் சொல்கிறேன், ஏற்கெனவே ஒரத்தநாட்டில் கால்நடை பண்ணை இருக்கிறது. ஓசூரில் ஆடுகளுக்கென்று தனியாக இருக்கிறது. கால்நடை பராமரிப்பு துறைக்கென்று தனியாக ஒரு பல்கலைக்கழகத்தைத் துவக்கியவரே எங்களுடைய தலைவர் கலைஞர் அவர்கள்தான். (மேசையைத் தட்டும் ஒலி) நாட்டின பசுக்களை, நாட்டின மாடுகளைக் காக்க வேண்டுமென்பதற்காக, தனி ஆராய்ச்சி நிலையம் என்று சொல்லியிருக்கிறீர்கள். நாட்டினங்களாக காங்கேயம் உள்ளிட்ட மாடுகள் இருக்கின்றன. ஆனால், அந்த மாடுகள் 1½ லிட்டர் முதல் 2 லிட்டருக்குமேல் பால் கொடுப்பதில்லை. பாலின் கொழுப்புச் சத்து 4 அல்லது 5 சதவிகிதம்தான் இருக்கும். ஆனால், Holstein Friesian, Jersey போன்ற மாட்டினங்கள் நாளொன்றுக்கு 20 லிட்டர் பால் கறக்கக்கூடியவையாக இருக்கின்றன. ஆனால், பாலின் கொழுப்புச் சத்து 3 சதவிகிதம்தான் இருக்கும். நாட்டின மாடுகளிலே இந்தியாவில் இருக்கின்ற பஞ்சாப், ஹரியானா, குஜராத் போன்ற மாநிலங்களில். . .

முற்பகல் 11–00

மாண்புமிகு பேரவைத் தலைவர்: பேரவையின் முன்னனுமதியுடன் வினாக்கள்–விடைகள் நேரம் நீட்டிக்கப்படுகிறது.

2020 மார்ச் 20]

திரு. கே.என். நேரு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பஞ்சாப், ஹரியானா, குஜராத் போன்ற மாநிலங்களிலே சாஹிவால், தார்பார்க்கர், ராட்டி, கிர் போன்ற நாட்டின பசுக்கள் நாளொன்றுக்கு 10 லிட்டர் பால் தருகின்றன. 6 சதவிகிதம் கொழுப்புச் சத்து இருக்கக்கூடிய பாலை தருகின்றன. எனவே, இவ்வகை நாட்டின மாடுகளை தமிழ்நாட்டிற்கு கொண்டுவந்து, இங்கிருக்கின்ற விவசாயிகள் பயன்பெறத்தக்க வகையிலே, ஆராய்ச்சிப் பண்ணையின் மூலமாக, விவசாயிகளுக்கு வழங்கப்படுமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு கால்நடை பராமரிப்புத் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. உடுமலை K. ராதாகிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மூத்த முன்னாள் அமைச்சர் அண்ணன் அவர்கள் பேசுகின்றபோது, அதிகளவில் பாலை கொடுக்கின்ற மற்ற இனங்களை இங்கே கொண்டுவந்து கொடுக்க வேண்டுமென்று சொன்னார்கள். ஏற்கெனவே, உள்நாட்டு மாட்டினங்களான, காங்கேயம், பர்கூர், ஆலம்பாடி, உம்பளச்சேரி, புளியகுளம் போன்ற இனங்களுடைய பால் உற்பத்தியை அதிகப்படுத்த வேண்டுமென்பது நம்முடைய நோக்கமாக இருக்கின்றது. அதற்காகத்தான் எந்தவகையிலே ஊட்டச்சத்துகள் கொடுத்தால் அதிக அளவிற்கு பாலை சுரக்கும் என்பதற்காக கால்நடை பல்கலைக்கழகத்தின் ஆய்வாளர்கள் மூலமாக ஆய்வு மேற்கொண்டு அது குறித்த கருத்தினைப் பெறுவதற்காக ஏற்கெனவே அவர்களுக்கு ஒரு வாய்ப்பினைக் கொடுத்திருக்கின்றோம். அந்தக் கருத்துகள் வரப்பெற்றவுடன் நாட்டின மாடுகள் அதிக அளவில் பாலை சுரப்பதற்குத் தேவையான உணவு வகைகளைக் கொடுப்பதற்கு ஏற்பாடு செய்யப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன். வெளிநாட்டின மாடுகளைக் கொண்டுவந்து, ஆராய்ச்சி நிலையத்திலே அதிகளவில் இனப் பெருக்கம் செய்து விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்கிற கருத்தைச் சொல்லியிருக்கின்றார்கள். ஏற்கெனவே, அனைத்து நாட்டினங்களையும், உள்நாட்டினங்களை எப்படி பாதுகாக்கின்றோமோ அதுபோல வெளிநாட்டினங்களையும் இங்கே கொண்டுவந்து, ஆராய்ச்சிப் பண்ணைகளின் மூலமாக அதிகளவு இனப் பெருக்கம் செய்து, குறைந்த விலையிலே நம்முடைய

விவசாயப் பெருங்குடி மக்களுக்குக் கொடுக்க வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஏற்கெனவே எங்களுக்குச் சொல்லியிருக்கின்றார்கள். ஆகவே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கூறியதையும் கவனத்திலே எடுத்து, அது குறித்து அரசு ஆவன செய்யும் என்பதை இந்த வேளையிலே மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா வரிசை எண் 143, மாண்புமிகு உறுப்பினர் திரு. கே.வி. சேகரன், மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள்.

143—

ஆரம்ப சுகாதார நிலையத்தைத் தரம் உயர்த்துதல்

***36357—திரு. கே.வி. சேகரன்:**

மாண்புமிகு மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், பெரியகொழப்பலூரில் உள்ள ஆரம்ப சுகாதார நிலையத்திற்குப் புதிய கட்டடம் கட்டி, 60 படுக்கைகள் கொண்ட பொது மருத்துவமனையாகத் தரம் உயர்த்த அரசு முன்வருமா?

மாண்புமிகு டாக்டர் சி. விஜய பாஸ்கர், மக்கள் நல்வாழ்வு மற்றும் குடும்ப நலத் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

போளூர் தொகுதி, பெரணமல்லூர் ஒன்றியம், பெரியகொழப்பலூரில் இயங்கக்கூடிய அரசு ஆரம்ப சுகாதார நிலையத்தில் 2018–2019 ஆம் ஆண்டிலே எழுப்பப்பட்ட கேள்விக்குப் பின்னால், 60 இலட்சம் ரூபாய்க்குப் புதிய கட்டடம் கட்டப்பட்டு, இப்போது நோயாளிகளின் பயன்பாட்டில் உள்ளது. ஒரு மாதத்திற்கு 11 பிரசவங்கள் நடக்கக்கூடிய, நல்ல முறையிலே செயலாற்றக்கூடிய மருத்துவமனை. மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் இன்னும் என்ன கோரிக்கைகளை வைக்கிறார்களோ அதை அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களின் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு அன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்.